<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>

வ.சா.1 – பாலா OS.No. 25/2021 நாள் : 10.08.2024

<u>1,3,5,6–பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1 ஆம் வாதி என் தாய்மாமா என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி வட்டித் தொழில் செய்வதற்காக எங்களிடம் கடன் வாங்கினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி ஸ்ரீராம் சிட்டியூனியன் பைனான்சில் 2012 வரை வேலை செய்தார் என்றால் சரிதான் . நானும் அந்த பைனான்சில் 2014 வரை வேலை செய்தேன் . நாங்கள் இருவரும் அந்த நிறுவனத்தில் வேலை செய்தபொழுது எங்களுக்குள் நேரடி பழக்கவழக்கம் இல்லை என்றால் சரியல்ல. அவர் எனக்கு கீழே வேலை செய்தார் . தினமும் என்னிடம்தான் அவர் வேலை சம்பந்தமாக பேசுவார். அந்த சமயத்தில் அங்கு வேலை செய்த மேலாளரை நான் காதலித்தேன் என்றால் சரியல்ல . ஆனால் அவர் என்னை திருமணம் செய்துகொள்ளாமல் வேறொரு பெண்ணை திருமணம் செய்துகொண்டார் என்றால் தவறு. அவ்வாறு எந்த ஒரு நிகழ்வும் நடைபெறவில்லை. 1 ஆம் வாதிக்கு ஏற்கனவே திருமணம் ஆகி ஒரு குழந்தை இருந்தது என்றால் சரிதான் . நான் மேற்சொன்ன மேலாளர் திருமணம் செய்ய மறுத்ததால் மனஉளைச்சலாகி என் தாய்மாமாவான 1 ஆம் வாதியின் வீட்டில் இருந்தேன் என்றால் தவறு . அவ்வாறான நிகழ்வு எதுவும் நடைபெறவில்லை. மேற்சொன்ன மேலாளரை பற்றி தகவல் தெரிந்துகொள்வதற்காகத்தான் 1 ஆம் பிரதிவாதியுடன் நான் தொலைபேசியில் பேச ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல . நான் சட்டவிரோதமாக 1 ஆம் வாதியை திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல . என் தகப்பனார் மரச்சாமான்கள் செய்து விற்கும் தொழில் செய்துவருகிறார் என்றால் சரியல்ல.

அவர் இரும்பு சாமான்கள் செய்யும் ஆச்சாரி தொழில் செய்து வந்தார் . 1 ஆம் பிரதிவாதி வட்டி தொழில் செய்வதற்காக பணத்தை கேட்டதாக சொல்லும்பொழுது அவர் வட்டி தொழில் செய்வதற்கான உரிமம் வைத்திருக்கிறாரா என்று தெரிந்துகொண்டேனா என்றால் அவர் வட்டி தொழில் நேரடியாக பணம் கொடுத்து செய்யும் தொழில் அல்ல . தான் வேலை செய்த தனலட்சுமி சீனிவாசன் சிட்ஸ் & பைனான்ஸ் மற்றும் செல்வபிரபா பைனான்ஸ் நிறுவனங்களில் முதலீடு செய்யும் நபர்களுக்காக உதவி செய்த வகையில் அவருக்கு பணம் தேவைப்பட்டு அதற்காக என்னிடம் கடன் வாங்கினார். பைனான்ஸ் கம்பெனியில் முதலீடு செய்பவர்களுக்காக தான் வாங்கினார் என்று தற்பொழுது சொன்ன விபரத்தினை என்னுடைய வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை . இந்த வழக்கில் பணபரிவர்த்தனை நடந்ததாக சொல்லும் தேதிக்கு முன்பு 1 ஆம் வாதிக்கும் , 1 ஆம் பிரதிவாதிக்கும் நேரடிபழக்கம் இல்லை என்றால் சரிதான். என் கணவருக்கு தாவாவில் சொல்லப்பட்டுள்ள தொகைகளை கொடுப்பதற்கு வசதி வாய்ப்பில்லை என்றால் சரியல்ல . என் தகப்பனார் செய்யக்கூடிய மரப்பொருட்களை என் கணவர் மூலமாக விற்று அந்த பணத்தை 1 ஆம் பிரதிவாதி மூலமாக என் தகப்பனாருக்கு கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல . என் தகப்பனார் மரப்பொருட்கள் செய்யும் தொழில் செய்யவில்லை. 1 ஆம் பிரதிவாதி வீட்டிற்கு கடந்த 05.10.2018 ஆம் தேதி பணத்தை கேட்டு சென்று அங்கு தற்கொலை செய்து கொள்வதாக மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் பணம் கேட்டு சென்றது உண்மைதான் . ஆனால் எங்களை அங்கேயே இரவு வரை உட்கார வைத்துவிட்டுஅவர் அங்கு வராமல் காவல்நிலையத்திற்கு

அவசர எண்ணை தொடர்பு கொண்டு போலீசாரை அங்கு வரவைத்தார் . காவல்நிலையத்தில் விசாரித்தபொழுது ஆதாரங்களை போலீசார் கேட்டார்கள் என்றும், என்னால் சமர்பிக்க முடியவில்லை என்று சொன்னால் கடன் கேட்டு சென்ற இடத்தில் திடீரென்று காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி சென்றதால் ஆதாரத்தை எடுத்துச்செல்லவில்லை . தவசீலன் என்ற நபரை வைத்து நான் 1 ஆம்பிரதிவாதியை மிரட்டினேன் என்பதால் அதுகுறித்து 1 ஆம் பிரதிவாதி என்மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் அது தவறு . பணம் கேட்டு சென்ற அன்று இரவு நேரமாகிவிட்டதால் , அந்த ஊரில் 1 ஆம்பிரதிவாதியுடன் பணியாற்றிய எட்டு பேர்கள் உள்ளார்கள் . அவர்களும், அந்த ஊர்க்காரர்களும், எங்களுடன் பணியாற்றிய தவசீலன் வீட்டில் தங்க வைத்ததால் அவர் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் . நான் 1 ஆம் பிரதிவாதியின் மீது புகார் கொடுத்து காவல்துறையினர் 1 ஆம் பிரதிவாதியை மிரட்டியதால் அவர்மீது 1 ஆம் பிரதிவாதி காவல்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல . 1 ஆம் பிரதிவாதி கொடுத்த புகாரில் நான் விசாரணைக்கு ஆஜராகியும் , 1 ஆம் பிரதிவாதி விசாரணைக்கு ஆஜராகாததால் அவரை ஆஜராகுமாறு உதவி ஆய்வாளர் சொன்னதற்காக அவர்மீது பொய்யான புகாரை கொடுத்தார் . காவல்துறையினரின் சட்டவிரோத நடவடிக்கைக்காக 1 ஆம் பிரதிவாதி காவல்துறையினருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான் . ரூபாய் நாற்பதாயிரம் சொந்த செலவிற்காக வட்டிக்கு கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி அவர் செலுத்தவேண்டிய அசல் மற்றும் வட்டித்தொகைகளை செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல . என்னுடைய வங்கி கணக்கில் 44 தவணைகளை 1 ஆம் பிரதிவாதி அந்த தொகைகளை

திருப்பி செலுத்தவிட்டார் என்றால் சரியல்ல . 2,3 மற்றும் 5,6 பிரதிவாதிகளுக்கும் இந்த பணப்பரிவர்த்தனைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் கொடுத்த உத்தரவாதத்தின் பேரிலும், அவர்களுடைய செலவிற்கும் சேர்த்துதான் கடன் வாங்கினார். எனக்கு 1 ஆம் பிரதிவாதியுடன் மட்டும்தான் பணபரிவர்த்தனை என்றாலும் , அவருடைய குடும்பத்தாருக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்றாலும் , அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால் பணத்தை எளிதில் 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து பறித்துவிடலாம் என்பதற்காக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகளும் அவ்வாறு உத்தரவாதம் கொடுத்ததாக என்னுடைய வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் தகப்பனாருக்காக 1 ஆம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்திய தொகைகளை காரணமாக வைத்துக்கொண்டு நான் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . 2,3,5,6 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல . 1 ஆம் பிரதிவாதி மற்ற நண்பர்களிடம் வாங்கிய கடனுக்காக 1 ஆம் பிரதிவாதியினுடைய ஆடு, மாடு , இருசக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்ததாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர் கடன் வாங்கும் பழக்கம் இல்லாதவர் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதியை நிறுவனத்தில் முறைகேடு செய்ததற்காக நீக்கப்பட்டார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. அவ்வாறு முறைகேடு செய்திருந்தால் இன்னொரு நிதிநிறுவனத்தில் வேலை கொடுத்திருக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல . மோசடி செய்த நிறுவனத்தில் அவர் நேரடியாக வேலை செய்தார் . 2 வது நிறுவனத்தில் முகவராகத்தான் பணியாற்றினார் .பிரதிவாதிகள் மீது பணம்

பறிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகைகளுக்கும் , 4 ஆம் பிரதிவாதி நிதிநிறுவனத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் , அந்த கடன் தொகைகள் எதுவும் 4 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமானத்தையோ, அடமானக்கடனையோ கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

ஒப்பம்.திரு.எம்.கிறிஸ்டோபர்,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ.),
அரியலூர்.